**விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்**

**முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 31–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சுருக்குமுறை ஆவண வழக்கு எண்.44/2026**

CNR.No.TNTH080000362026

| | |
|---|---|
| புகார்தாரர் | ஆ.ரவிச்சந்திரன் (வயது 57/2026),<br>த/பெ.ஆண்டவர்,<br>வார்டு–8 கதவு எண்.2/1/M,<br>கோட்டை மேட்டு தெரு, கூடலூர்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| எதிரி | மு.ஞானேஸ்வரன் (வயது 60/2026),<br>த/பெ.முத்தப்பகவுண்டர்,<br>வார்டு–7, பஞ்சாயத்து போர்டு தெரு,<br>க.புதுப்பட்டி,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிட்டது | மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ் |
| காசோலை எண். (522584) | 15.12.2025 |
| காசோலை தொகை | Rs.3,00,000/– |
| வசூலுக்கு தாக்கல் செய்த நாள் | 15.12.2025 |
| காசோலை திரும்பிய நாள் | 16.12.2025 |
| காசோலை திரும்பிய காரணம் | Kindly Contact Drawer/Drawee bank and please present again |
| அறிவிப்பு அனுப்பிய நாள் | 19.12.2025 |
| அறிவிப்பு பெறப்பட்ட நாள் | 20.12.2025 |
| வழக்கு தாக்கல் நாள் | 28.01.2026 |
| தீர்ப்பு நாள் | 31.07.2026 |
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.M.பிரகாஷ் |



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:17:45 +0530

| | |
|---|---|
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.K.ஈஸ்வரன் |
| **தீர்வு** | எதிரி ஆஜர். **எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

**1. புகார்தாரர் வழக்கு சுருக்கம்:**

புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே உள்ள குடும்ப பழக்கவழக்கத்தின் அடிப்படையில், எதிரி தனது அவசரநிமித்தம், குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்க்கவும் வேண்டி புகார்தாரரிடம் கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 16.11.2025ம் தேதி ரூ.3,00,000/–ஐ தனது வீட்டில் வைத்து எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 15.12.2025 நாளிட்ட 522584 என்ற எண் கொண்ட இந்தியன் வங்கி, கம்பம் கிளைக்குரிய ரூ.3,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, கூடலூர் கிளையில் 15.12.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Kindly contact Drawer/Drawee bank and please present again" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 16.12.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 19.12.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 20.12.2025ம் தேதி எதிரி பெற்றுகொண்டு, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:17:51 +0530

பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

**3.** எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது பொய் வழக்கு என்றும், எனது காசோலை புத்தகம் தொலைந்து விட்டது என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

**4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

புகார்தாரர் திரு.ரவிச்சந்திரன் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 15.12.2025–ம் தேதியிட்ட 522584 என்ற எண் கொண்ட இந்தியன் வங்கி, கம்பம் கிளைக்குரிய ரூ.3,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலை "Kindly contact Drawer/Drawee bank and please present again" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 16.12.2025ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 19.12.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக இரசீது அசல் ம.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி 20.12.2025ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆகவும், ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:17:58 +0530

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் வழக்கு என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எ.சா.1 திரு.ஞானேஸ்வரன் தனது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. அவரிடம் பணம் வாங்கவில்லை மற்றும் காசோலையை கொடுக்கவில்லை. கடந்த 2019 ல் கூடலூரை சேர்ந்த மணிவாசகம் என்பவரிடம் ரூ.1 லட்சம் வட்டிக்காக வாங்கினேன். மேற்படி பணத்திற்கு ஆதரவாக காசோலை கேட்டதன் பேரில் நான் காசோலையை கொடுத்தேன். நான் பெற்ற பணத்திற்கு மூன்று மாதத்தில் ரூ.1,04,500 திருப்பி கொடுத்துவிட்டேன். அப்போது காசோலையை வாங்கி கொள்ளும்படி மணிவாசகம் கூறினார். மீண்டும் காசோலையை கேட்டதற்கு வட்டி கொடுக்க வேண்டும் என்று கூறி காசோலையை கொடுக்கவில்லை.

6.2. பின்பு 2025 ல் புகார்தாரர் மூலம் எனக்கு அறிவிப்பு அனுப்பினார். அது சம்மந்தமாக மணிவாசகத்திடம் கேட்டபோது ரவிச்சந்திரன் எனது மைத்துனர் என்றும், தான் பேசி காசோலையை பெற்று தருவதாக மணிவாசகம் கூறினார். கடந்த 15.11.2025 ம் தேதியன்று இரவு 07.45 மணியளவில் எனது மகள் காயத்ரி தேவியை பார்ப்பதற்காக சென்னைக்கு KRS டிராவல்ஸ் பேருந்தில் சென்றேன். அதற்கான பேருந்து இரசீதை எ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். எ.சா.2 திரு.சுப்பிரமணியன் தனது சாட்சியத்தில், கடந்த 16.11.2025 ம் தேதியன்று எதிரி அலுவலகத்தில் வந்து தன்னை சந்தித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:05 +0530

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் முன்வைத்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. மேற்படி காசோலை திரும்பியதை குறித்து புகார்தாரர் எதிரிக்கு தகவல் தெரிவித்தும் எதிரி எவ்வித பதிலும் அளிக்காத காரணத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிக்கு ஆதரவாக எ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். எ.சா.ஆ.1 ஆன ஆவணமானது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வாதத்தை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. எதிரி முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

8.1. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/- கடனாக வாங்கவில்லை. கடந்த 2019ல் எதிரி மணிவாசகம் என்பவரிடம் பெற்ற ரூ.1 லட்சம் கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலையை மணிவாசகத்தின் மைத்துனரான புகார்தாரரிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காரணத்தை குறிப்பிட்டு காசோலை திருப்பப்பட்டதால் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான சாராம்சம் பூர்த்தி அடையவில்லை. எதிரி புகார்தாரரிடம் கடன் பெறவில்லை மற்றும்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:13 +0530

காசோலையை கொடுக்கவில்லை. எதிரி கடன் வாங்கியதாக சொல்லப்படும் தேதியன்று அவர் சென்னையில் இருந்தார் என்பதை எ.சா.ஆ.1 ஆன ஆவணம் மற்றும் எ.சா.2 ன் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

**9.** சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

**10.** இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 15.12.2025-ம் தேதியிட்டு ரூ.3,00,000/-க்கு கொடுத்த இந்தியன் வங்கி, கம்பம் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- மேற்படி காசோலையானது கடந்த 16.12.2025 ம் தேதியன்று Kindly contact Drawer/Drawee bank and please present again என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, கூடலூர் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- காசோலை திரும்பியது குறித்து 19.12.2025-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர்



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:20 +0530

அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- மேற்படி அறிவிப்பை 20.12.2025-ம் தேதியன்று எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையானது எதிரியின் காசோலைதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)-ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139-ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:27 +0530

சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் சங்கதிகள் யாதெனில்,

"எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/- கைமாற்றுகடன் வாங்கவில்லை என்றும், கடந்த 2019ல் மணிவாசகம் என்பவரிடம் எதிரி பெற்ற ரூ.1லட்சம் கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலையை மணிவாசகத்தின் மைத்துனரான புகார்தாரரிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுத்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10.5. புகார்தாரர் அவரது புகார்மனுவில், எதிரியின் அவசரநிமித்தம், குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்க்கவும் கடன் பெற்றதாகவும், அதற்கு ஆதரவாக தாவா காசோலையை கொடுத்ததாகவும், அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Kindly contact Drawer/Drawee bank and please present again என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது என்று கூறியுள்ளார்.

10.6. மேற்படி காரணத்தை குறிப்பிட்டு காசோலை திருப்பப்பட்டதால் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான சாராம்சம் பூர்த்தி அடையவில்லை என எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டது. காசோலை கொடுத்த நபரை தொடர்பு கொண்ட பின்னர் காசோலையை மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்யும்படி காசோலையானது திருப்பப்பட்டது. மேற்படி விபரங்களை குறித்து புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோது, **"காசோலை திரும்பிய மறுநாள் எதிரியை பார்த்தேனா என்றால் மறுநாள் சென்று பார்த்தேன், அவர் முறையாக பதில் சொல்லவில்லை"** என சாட்சியம் அளித்துள்ளார். காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:35 +0530

அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்றுக்கொண்டு, அவரது தரப்பினை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பாமல் இருந்துள்ளார்.

10.7. மேற்படி காசோலை திரும்பியதை குறித்து புகார்தாரர் எதிரிக்கு நேரிலும், அறிவிப்பு அனுப்புவதன் மூலமும் தகவல் தெரிவித்தும் எதிரி எவ்வித பதிலும் அளிக்காத காரணத்தினால் வழக்கு தாக்கல் செய்ததாக புகார்தாரர் தரப்பில் வாதிக்கப்பட்டது. காசோலை வசூலாகாமல் திரும்பிய விபரமானது எதிரிக்கு தெரியவந்த பிறகு அவர் புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பாத நிலையில், புகார்தாரர் மீண்டும் காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்வதில் எவ்வித பலனும் இல்லை என்பதாகும். ஆகையால் புகார்தாரர் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை திரும்ப பெறுவதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதில் எவ்வித பிழையும் இல்லை என்று தீர்வு காண்கிறது. மேலும் இவ்வழக்கில் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான சாராம்சம் பூர்த்தி அடையவில்லை என எதிரி தரப்பில் கூறிய வாதமானது ஏற்புடையதாக இல்லை என்று முடிவு செய்கிறது.

10.8. புகார்தாரர் அவரது புகார்மனுவில் உள்ள விபரங்களை ஒத்திசைத்தே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். ஆனால் காசோலையை எதிரி புகார்தாரரிடம் கொடுக்கவில்லை என எதிரி தரப்பில் கூறப்பட்டது.

10.9. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது சாட்சியத்தில், கடந்த 2019 ல் மணிவாசகம் என்பவரிடம் ரூ.1 லட்சம் வட்டிக்காக வாங்கியும், அதற்கு ஆதரவாக காசோலையை கொடுத்தார் என்றும், எதிரி பெற்ற பணத்திற்கு மூன்று மாதத்தில் ரூ.1,04,500 திருப்பி கொடுத்துவிட்டு காசோலையை கேட்டதற்கு வட்டி கொடுக்க வேண்டும் என்று கூறி காசோலையை கொடுக்கவில்லை என்றும், பின்பு 2025 ல் புகார்தாரர் மூலம் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றும்,



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:42 +0530

கடந்த 15.11.2025ம் தேதியன்று இரவு 07.45 மணியளவில் எதிரியின் மகள் காயத்ரிதேவியை பார்ப்பதற்காக சென்னைக்கு KRS டிராவல்ஸ் பேருந்தில் சென்றார் என்று சாட்சியம் அளித்தும், அதற்கான பேருந்து இரசீதை எ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார்.

10.10. மேற்படி மணிவாசகத்திடம் எதிரி வாங்கிய கடனுக்கு ஆதரவாக காசோலை கொடுத்தேன் என்று எதிரி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இந்நீதிமன்றத்தில் எதிரியிடம் வழக்கு சம்மந்தமாக கேட்கப்பட்ட முதல் கேள்வியின்போது, **"எனது காசோலை புத்தகம் தொலைந்து விட்டது"** என்று எதிரி பதில் அளித்துள்ளார். எதிரியிடம் வழக்கு சம்பந்தமாக நீதிமன்றம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலுடன் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார் என்பது கண்டறியப்படுகிறது.

10.11. மேற்படி மணிவாசகம் என்பவர் புகார்தாரருக்கு மைத்துனர் என்பதால், மணிவாசகத்திடம் கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டது. புகார்தாரருக்கு மணிவாசகம் என்பவர் மைத்துனர் என புகார்தாரர் ஒப்புக்கொண்டாலும், மணிவாசகத்திற்கும், தனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என புகார்தாரர் கூறியுள்ளார்.

10.12. புகார்தாரருக்கும், மணிவாசகத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை உள்ளது என்றும், மணிவாசகத்திடம் எதிரி பெற்ற கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதை நிரூபிக்கும் வகையில் மணிவாசகத்தை எதிரி தரப்பில் சாட்சியாக விசாரிக்க எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை. புகார்தாரருக்கும், மணிவாசகத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித சாட்சிகளும், ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எனவே புகார்தாரருக்கும், மணிவாசகத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை உள்ளது என்பதை எதிரி தரப்பில் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்கிறது.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:50 +0530

10.13. மேலும் புகார்தாரர், எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியான 16.11.2025 அன்று எதிரி சென்னையில் இருந்ததாகவும், புகார்தாரரை சந்திக்கவில்லை என்று கூறி 15.11.2025 அன்று இரவு 7.45 மணியளவில் எதிரி சென்னைக்கு சென்றார் என்பதற்கு KRS டிராவல்ஸ் பேருந்தின் ரசீதை எ.சா.ஆ.1 ஆக எதிரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி KRS டிராவல்ஸ் அலுவலகத்திற்கு சென்று எதிரி பயணச்சீட்டை பெற்றதாக கூறியுள்ளார். ஆனால் எதிரி எவ்வளவு ரூபாய் கொடுத்து பயணச்சீட்டை பதிவு செய்தார் என்றும், எத்தனை மணிக்கு பதிவு செய்தார் என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில், எதிரி பேருந்தின் அலுவலகத்திற்கு சென்று பயணச்சீட்டை பெற்றிருந்தால் மேற்படி விபரங்களை தெரியாது என எதற்காக கூறியுள்ளார் என்று சந்தேகம் எழுகின்றது.

10.14. இந்நிலையில், எதிரி 15.11.2025 ம் தேதியன்று சென்னைக்கு KRS பேருந்தில் செல்லவில்லை என்றும், வழக்கிற்காக எ.சா.ஆ.1 ஆன ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்று புகார்தாரர் தரப்பில் வாதிக்கப்பட்டது. பொதுவாக தனியார் பேருந்தில் பயணச்சீட்டை பதிவு செய்தால் பேருந்தில் செல்லும் நபர்களின் பெயர்களையும், அவர்களது இருக்கை எண்களையும் நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவு செய்து வைத்திருப்பார்கள். அதன் அடிப்படையில் எதிரி மேற்படி தேதியன்று KRS பேருந்தில் சென்னைக்கு சென்றிருந்தால் அவரது பயண விபரங்களானது KRS அலுவலக இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அவ்வாறு எவ்வித பதிவுகளையும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

10.15. மேலும் தனியார் பேருந்தில் பயணம் செய்யும் நபர்களின் தொலைபேசி எண்ணிற்கு பயணத்தின் விபரங்களை குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு குறுஞ்செய்தி எதிரிக்கு அனுப்பவில்லை என அவர் கூறியுள்ளார். மேலும் எதிரிக்கு குறுஞ்செய்தி



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:18:58 +0530

அனுப்பப்பட்டதா? இல்லையா? என்பதை நிரூபிக்கும் வகையில் KRS நிறுவனத்தின் நபர்களை எதிரி தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை.

10.16. பொதுவாக தனியார் பேருந்து அலுவலகத்திற்கு நன்கு தெரிந்த நபர் பயணம் செல்லாமல் பயணச்சீட்டை பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது என்று கருதப்படுகிறது. எதிரி 15.11.2025 ம் தேதியன்று KRS பேருந்தில் பயணம் செய்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் மேற்படி அலுவலகத்தின் நபர்களை சாட்சியாக விசாரிக்கவும், KRS அலுவலகத்தின் இணையதளத்தின் பதிவுகளை தாக்கல் செய்வதற்கும் எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை.

10.17. மேலும் 16.11.2025 ம் தேதியன்று எதிரி சென்னையில் இருந்து கோயம்பேடு சென்று திருச்சி அரசு பேருந்தில் ஊருக்கு வந்தேன் என எதிரி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அதற்கான பேருந்து ரசீதுகளை எதிரி தாக்கல் செய்யவில்லை. எதிரி சென்னைக்கு சென்றதற்கான பேருந்து ரசீதை தனது பொறுப்பில் வைத்திருக்கும் நிலையில், அவர் சென்னையிலிருந்து திரும்பி ஊருக்கு வந்ததற்கான பேருந்து ரசீதை தாக்கல் செய்யாதநிலையில் எ.சா.ஆ.1 ஆன ரசீதானது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது. ஆகையால் எ.சா.ஆ.1 ஆன ஆவணத்தை மட்டும் வைத்து எதிரி 15.11.2025 ம் தேதியன்று KRS பேருந்தில் பயணம் செய்தார் என்று தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.18. மேலும் 15.11.2025 ம் தேதியன்று இரவு எதிரி KRS பேருந்தில் பயணம் செய்து 16.11.2025 ம் தேதியன்று காலையில் சென்னைக்கு சென்று எதிரியின் மகளை சந்தித்துவிட்டு, எ.சா.2 ஆன சுப்பிரமணியன் என்பவரை சந்தித்ததாக எதிரி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எதிரி அவரது மகளை சென்னையில் சந்தித்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரியின் மகளை அவரது தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை.

10.19. மேலும் எ.சா.2 ஆன சுப்பிரமணியன் அவரது சாட்சியத்தில், 16.11.2025 ம் தேதியன்று காலை 11.45 சென்னையில் எ.சா.2 யை அவரது



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:19:07 +0530

அலுவலகத்தில் வைத்து எதிரி சந்தித்தார் என்றும், அன்றைய தேதியில் ஞானேஸ்வரன் வந்து ரவிச்சந்திரனுடன் வரவு செலவு இருப்பதாக கூறினார் என சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் புகார்தாரரான ரவிச்சந்திரனுக்கும், எதிரிக்கும் இடையே வரவு, செலவு இல்லை என எதிரி சாட்சியம் அளித்துள்ள விபரங்களுக்கு முரண்பட்டு எ.சா.2 அவரது சாட்சியத்தில், புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே வரவு, செலவு இருப்பதாக எதிரி கூறினார் என சாட்சியம் அளித்துள்ளார். ஆகையால் எதிரிக்கும், எ.சா.2 ன் சாட்சியத்திற்கும் இடையே முரண்பாடுகள் கண்டிறியப்பட்டுள்ளது.

10.20. மேலும் 16.11.2025 ம்தேதியன்று காலை 8.00 மணியளவில் எதிரி எ.சா.2 ற்கு போன் செய்து பார்க்க வருவதாக கூறினார் என எ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி சமயத்தில் எதிரி போன் செய்ததற்கான தொலைபேசி பதிவுகளை தாக்கல் செய்ய தயாராக இல்லை என எ.சா.2 கூறியுள்ளார். மேலும் 16.11.2025 ம் தேதியன்று எதிரி சென்னையில் இருந்தார் என்றும், எ.சா.2 யை சந்தித்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரியின் செல்போன் டவர் லொகேசனை அவரது தரப்பில் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில், எதிரிக்கும், எ.சா.2 க்கும் 40 வருடம் பழக்கம் என்றும், எதிரி கூறியதன் பேரில் எ.சா.2 சாட்சியம் அளிக்க வந்துள்ளார் என்ற காரணத்தினால் எ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து 16.11.2025 ம் தேதியன்று எதிரி சென்னையில் இருந்தார் என்று தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.21. மேலும் எதிரி மணிவாசகத்திடம் 2019 ம் ஆண்டில் கடன் பெற்று மூன்று மாதத்தில் திருப்பி கொடுத்ததாக கூறும்பட்சத்தில், காசோலையை திரும்ப பெறுவதற்கு எதிரி சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மேலும் மணிவாசகத்திடம் கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்ததாக கூறும்பட்சத்தில், மணிவாசகத்தின் மீது எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் 2019 ல் இருந்து



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:19:14 +0530

2025 வரை காசோலையை திரும்ப பெறுவதற்கு சட்டப்படியான நடவடிக்கை எடுக்காமல் அமைதி காத்துள்ளதால் எதிரியின் மீது சந்தேகம் எழுகிறது.

10.22. இவ்வழக்கில் காசோலை மற்றும் அதில் உள்ள கையொப்பம் எதிரியுடையது என்ற காரணத்தினாலும், மணிவாசகத்திடம் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்ததாக கூறும்பட்சத்தில், எதிரி எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலும், எதிரி புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பாத காரணத்தினாலும், எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்றும், காசோலை கொடுக்கவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே எதிரி புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், காசோலை தொகையை எதிரி கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது

10.23. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138-ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11. <u>முடிவு:</u>**

எதிரி ஆஜர். முடிவாக எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12.<u>தண்டனை:</u>**

முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:19:21 +0530

பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு 3 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

**13. <u>குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:</u>**

தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜீலை மாதம் 31–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:19:28 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**1. <u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு.ரவிச்சந்திரன் (புகார்தாரர்) |

**2. <u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 15.12.2025 நாளிட்ட 522584 என்ற எண் கொண்ட இந்தியன் வங்கி, கம்பம் கிளைக்குரிய ரூ.3,00,000/–க்கான காசோலை அசல் |
| 2 | ம.சா.ஆ.2 | 16.12.2025 நாளிட்டு Kindly contact Drawer/Drawee bank and please present again என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல் |
| 3 | ம.சா.ஆ.3 | 19.12.2025 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் |

| | | |
|---|---|---|
| | | அறிவிப்பு அலுவலக இரசீது அசல் |
| 4 | ம.சா.ஆ.4 | 20.12.2025 நாளிட்டு அறிவிப்பினை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |

**3. <u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை**

**4. <u>எதிரி தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.1 | திரு.ஞானேஸ்வரன் |
| 2 | எ.சா.2 | திரு.சுப்பிரமணியன் |

**<u>5. எதிரி தரப்பு சான்றாவணம்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.ஆ.1 | எதிரி கடந்த 15.11.2025ம் தேதியன்று இரவு 07.45 மணியளவில் KRS டிராவல்ஸ் பேருந்தில் சென்னைக்கு பயணம் செய்ததற்கான இரசீது |

**<u>6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை</u>**

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:19:35 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**